## இயல் 7.1 - எண்ணியல்


பயிற்சி எண் :: 7.1.5.2.A

எண்ணியல் - தசம எண்களின் கூட்டலும் கழித்தலும் - அட்டவணை முறை - வரையறை


## எண்ணியல் - தசம எண்களின் கூட்டலும் கழித்தலும் - அட்டவணை முறை - வரையறை

தசம எண்களிலும் முழு எண்களைப் போலவே கணிதச் செயல்பாடுகளை செய்ய இயலும். இதனை அட்டவணை முறை மற்றும் இடமதிப்பு அட்டவணை முறை மூலம் புரிந்து கொள்ளலாம்.


### அட்டவணை முறை



முழுப் பகுதியான $10 \times 10$ அட்டவணையானது 1 - ஐக் குறிக்கும்.




ஒரு செவ்வகப் பரப்பு பத்தில் ஒன்று அதாவது 0.1 - ஐக் குறிக்கும்.



ஒரு சிறிய சதுரம் நூறில் ஒன்று அதாவது 0.01 - ஐக் குறிக்கும்.

### 0.24 மற்றும் 0.14 - ஐத் தசம அட்டவணை முறையைப் பயன்படுத்திக் கூட்டுக.


- $0.24 = \frac{24}{100}$ மற்றும் $0.14 = \frac{14}{100}$.
- அட்டவணையில் 0.24 பகுதியை நீல நிறத்திலும், 0.14 பகுதியை பச்சை நிறத்திலும் வண்ணமிடுக.
- வண்ணமிடப்பட்ட மொத்த சதுரங்களின் எண்ணிக்கையே விடையாகும்.
- வண்ணமிடப்பட்ட சதுரங்களின் எண்ணிக்கை $\frac{38}{100}$.



0.24 + 0.14 = **0.38**

### 0.12 மற்றும் 0.06 - ஐத் தசம அட்டவணை முறையைப் பயன்படுத்திக் கழிக்க.

- $0.12 = \frac{12}{100}$ மற்றும் $0.06 = \frac{6}{100}$.
- அட்டவணையில் 0.12 பகுதியை நீல நிறத்தில் வண்ணமிடுக.
- கழிக்க வேண்டிய 0.06 - ஐ வண்ணமிட்டப் பகுதியில் குறுக்குக்கோடிடுக.
- வண்ணமிடப்பட்டு குறுக்குக் கோடிடப்படாத சதுரங்களின் எண்ணிக்கையே விடையாகும்.
- வண்ணமிடப்பட்டு குறுக்குக் கோடிடப்படாத சதுரங்களின் எண்ணிக்கை $\frac{6}{100}$.



0.12 - 0.06 = **0.06**

## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/OhGPXUeoOEw

## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Friday 7th October, 2022 :: 04:35 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**